முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

## ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

## எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

## சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 05 திகதி முதல் சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 12 திகதி வரை (22.10.2023 ஞாயிறு முதல் 29.10.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. கலியினில் கந்த வேலனால்
   கருணைபட தசவாசல் திறவு
   அழியாமை எனும் பேரின்ப
   ஆக்கம் கொண்ட ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் அவதாரம்மெச்சி
   அகத்திய மகரிஷி யானும்
   வரங்களாக இந்தியா தமிழகத்தில்
   வருங்கால பலனாக சோபகிருது துலைதிங்கள்
3. திங்களிலே பஞ்சதிகதிமேல் வியதிகதிவரை
   தேசமதில் நடக்கும் நிகழ்வாக
   இங்கனமே வார ஆசிதனை
   இயம்பிடுவேன் அரங்க ஞானிகேட்க
4. கேட்கவே கலியினில் அறுவடை
   குறைநிறை கண்டு அதன்படி
   திட்டமிட்டு அரங்கேற இருக்க
   தேசநலம் கருதா பதவிகள்தனை
5. பதவிகள்தனை கொண்டு தனக்கே
   பதுக்கல் சுருட்டல் செய்தவர்கள்
   மேதகு மக்கள் சேவை மறந்து
   முழுமைபட ஊழல் புரிந்தவர்கள்
6. புரிந்தவர்கள் புண்ணியம் மறந்து
   பொருள் பற்றுக் கொண்டுமே

திரிந்தவர்கள் தரும வழிவிட்டு
தீங்கில் திளைத்தவர்கள் எல்லாம்
7. எல்லோரும் நீதிஅரசன் பிடியில்
ஏதும் செய்யமுடியா அகப்பட்டு
வல்லமை இழந்து வீள்வர்
வருங்காலம் அதிகார வர்க்கம்
8. வர்க்கம் அஞ்சுகின்ற வண்ணம்
வறுமையிலும் தவறிழைக்கா
தர்மவழி கடமை ஆற்றி
தமிழக இந்திய வளர்ச்சிக்கு
9. வளர்ச்சிக்கு குந்தகம் வாரா
வாய்மைபட தயவு நிறைந்த
வளர்ச்சிமிகு சேவை ஆற்றியே
வருங்காலம் ஞான ஆட்சிமலர
10.மலர மாற்றம் நிகழுகின்ற
மாண்புதனை கண்டிட நேரும்
சலனமற அரங்கஞானி காட்டும்
சன்மார்க்க வழிவர அற்புதம் நிகழும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 05ம் நாள் 22.10.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மாதம் 12ம் நாள் 29.10.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

கலியுகத்தினில் முருகப்பெருமானின் கருணையினாலே தசவாசலாகிய பத்தாம் வாசலாகிய புருவமத்தி திறவு கண்டு அமிழ்தம் உண்டு அழிவிலா என்கிற மரணமிலா பேரின்ப நிலை அடைந்து வெற்றி கண்டிட்ட ஆறுமுக அரங்க மகா தேசிகனே உமது அற்புதமான அவதாரத்தை மெச்சி அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்திலே வருங்கால பலனாக சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 05ம் நாள் 22.10.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மாதம் 12ம் நாள் 29.10.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில்

நிகழவிருக்கும் நிகழ்வுகளை அரங்க ஞானி கேட்க வார ஆசிநூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

ஒவ்வொருவரும் அவரவர் செய்திட்ட நன்மை தீமைகளுக்கு ஏற்றாற் போல இன்ப துன்பங்களை அனுபவிக்கும் நிகழ்வுகள் அரங்கேற இருக்கின்றதப்பா. ஆயினும் தேசநலன் கருதாமல் தாம் மக்களுக்கு சேவை செய்வதற்காகவே ஏற்றுக்கொண்ட பதவிகளை சுயநலமாய் பயன்படுத்தி பதுக்கலும் சுருட்டலும் செய்தும் ஊழல் புரிந்தும் வருவதும் பாவபுண்ணியங்களை மறந்து பொருள் மீது கொண்ட பற்றினால் மிகுதி பொருள் சேர்த்தும் தருமத்தை மறந்து தீய வழியில் சென்று தீங்கு செய்தவர்கள் எல்லாம் நீதிதேவனின் பிடியில் அகப்பட்டு ஏதும் செய்ய முடியாமல் போய் அவரவரின் வல்லமைகளை இழந்து வீழ்ச்சி அடைவார்கள்.

அதன் தொடர்ச்சியாகவே இனி வரும் காலங்களில் வறுமையாய் இருந்த போதும் பொருள் பற்று கொண்டு தவறு செய்யாமல் தர்மவழி நடந்து அவரவரின் கடமைகளை செவ்வனே தவறாது செய்து நாட்டின் வளர்ச்சிக்கு எந்தவித இடையூறும் வராமல் வாய்மையும், நீதியும், தயவும் மிகுந்த வகையிலே தொண்டாற்றிடும் தூயவர்கள் வருவார்கள். அவர்கள் ஞான ஆட்சி மலர்ந்திட நல்ல மாற்றங்கள் உருவாகிட உகந்தவர்கள் நாட்டில் உருவாகிட உத்தம தர்மஞான வழிகாட்டும் ஆறுமுக அரங்க மகான் கூறும் சமரசசுத்த சன்மார்க்க நெறியினில் வந்து தொடர்ந்திட நாடெங்கும் அற்புதங்கள் நிகழுப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–